1981 மார்ச் 7]

திரு. எஸ். சிவராமன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தப் பால் பவுடர் தொழிற்சாலை ஆரம்பிக்கப் போவதாகச் சொல்கிறார்கள். ஆனால், புதிதாக அரசின் திட்டத்தில் பால் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை ஏற்பட இருக்கிறதா? அவ்வாறு ஏற்படும் தொழிற்சாலை பின்தங்கிய பகுதியான தென் ஆற்காடு சின்ன சேலத்திலே—பால் விநியோகம் நடந்து கொண்டிருக்கிறது, கட்டிடம் கட்டிக் கொண்டிருக்கிறார்கள்—அங்கே, அந்தத் தொழிற்சாலை ஏற்படுத்தப்படுமா? அவ்வாறு ஏற்படுத்தினால் பின்தங்கிய மக்களுக்கு நல்ல வாழ்வு கிடைக்கும்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அத்தொழிற்சாலை அங்கு ஏற்படுமா என்று கேளுங்கள், வாழ்வு கிடைப்பது பின்னால், வந்த பிறகு.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஈரோட்டில் சித்தோட்டில் இன்றைக்கு ரூபாய் 375 இலட்சம் மூலதனத்தில் அமைந்திருக்கிற பால் பதனிடும், பால் பொடி தயாரிப்புத் தொழிற்சாலை "முதல் பால் பெருக்குத் திட்டத்தின்" அடிப்படையிலே துவக்கப்பட்டது என்பதனையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தன்னுடைய தொகுதியைப் பற்றி சொன்ன விவரங்களை அரசு கவனத்திலே கொள்ளும் என்பதனையும் இந்த நேரத்திலே சொல்லிக் கொள்கிறேன்.

திரு. கோவைத்தம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்கு முதலீடு ஒதுக்கும்போது, இந்தத் திட்டம் கோவை மாவட்டத்தில் இருந்தது. இப்பொழுது பெரியார் மாவட்டமாகப் பிரிந்த பிறகு கோவை மாவட்டத்திலுள்ள பால் உற்பத்தியாளர் நாணயச் சங்கத்தின் சார்பாக உற்பத்தியாகும் பாலை, அந்தப் பால் பவுடர் தொழிற்சாலைக்குப் பயன்படுத்த அரசுக்கு உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய ஆலோசனைகள் கவனிக்கப்படும்.

படவேடு ஸ்ரீ ரேணுகாம்பாள் கோவில் திருப்பணி.

*வினா எண் 418—திரு. இல. பலராமன் : மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம், போளூர் தாலுக்கா, படவேடு ஸ்ரீ ரேணுகாம்பாள் சன்னதியில் திருப்பணி செய்ய விண்ணப்பிக்கப் பட்டுள்ளதா ?

(ஆ) இதன் மதிப்பீடு யாது ?

(இ) இந்தச் சன்னதி எந்தத் தகுதியின் அடிப்படையில் பிரிக்கப்பட்டுள்ளது ?

(ஈ) வேறு ஆலயத்தோடு இணைக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு திரு. ஆர்.எம். வீரப்பன்: (அ) மற்றும் (ஆ) வட ஆற்காடு மாவட்டம், போளூர் வட்டம், படவேடு அருள்மிகு ரேணுகாம்பாள் ஆலயத்திற்கு திருப்பணி செய்ய 1978-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 30 ஆம் நாளில் திருப்பணிக் குழு அங்கீகரிக்கப்பட்டு திருப்பணி வேலைகள் செய்ய ரூபாய் 44,000 மதிப்பீட்டிற்கு 1980 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 28 ஆம் நாள் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

(இ) மேற்கண்ட ஆலயம் இரண்டாம் நிலை செயல் அலுவலர் நிர்வாகத்தில் உள்ளது.

(ஈ) இல்லை.

திரு. இல. பலராமன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இது ஒரு பழமையான, புராதனமான கோயில். ஆதி சங்கரர் போன்ற பெரியவர்கள் அந்தக் கோயிலில் வணங்கியிருக்கிறார்கள் என்ற ஒரு வரலாறு இருந்தாலும், அதை மேலும் புதுப்பிப்பதற்கு இன்றைய வரையில் அங்கீகாரம் வரவில்லையென்றுதான் நான் அறிகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ரூபாய் 44,000 அளவுக்கு அங்கீகரிக்கப்பட்டது என்று கூறியிருக்கிறார்கள். அதைப்பற்றி அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்துவார்களா ? அந்தத் திருப்பணிக் குழு யார், யாரைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. மேலும் சில திருப்பணிகளைச் செய்ய வேண்டுமென்று மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்களுக்கும் அறநிலையத் துறைக்கும் கோரிக்கை வைக்கப்பட்டிருப்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அந்தத் திருப்பணிக் குழுவினுடைய பட்டியல் என்னிடத்திலே இல்லை. ஆனால், இந்த 44,000 மதிப்பீடு என்பது உபயக்காரர்களால் செய்யப்படுகின்ற திருப்பணி என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. சுமார் 5 பேர்கள் இந்த 44,000-க்குப் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மேலும், திருப்பணி பற்றிய வேண்டுகோள் அறநிலையத் துறைக்கு வந்திருக்கிறதா என்று விசாரித்து, அதைப் பற்றிய தகவலைப் பரிசீலித்து அறநிலையத் துறை நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.